# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

போதைப் பொருட்களை ஒழிக்க, ஒன்றிணைந்த முயற்சிகள் தேவைப்படுகிறது என்பதால்தான், நாம் எல்லாம் இன்றைக்கு ஒன்று கூடியிருக்கிறோம். குற்றவாளிகளை கைது செய்வதற்கும், விசாரணை மேற்கொள்ளவும் உங்கள் மாநிலத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு காவல்துறையினருக்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை. அதை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தமிழ்நாட்டிற்குள் வருவதைத் தடுக்க, தமிழ்நாடு காவல்துறையினரும், அண்டை மாநில காவல்துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில், கேரள காவல்துறையினர் கொடுத்த தகவலை வைத்து, நாமக்கல் மாவட்டத்தில், ஏ.டி.எம். பணத்தை கொள்ளையடிக்கும் கொடுங்கும்பலை தமிழ்நாடு காவல்துறையினர் வெற்றிகரமாகக் கைது செய்தார்கள். இந்தக் குற்றவாளிகள் கேரளாவில் வெவ்வேறு இடங்களில் ஏ.டி.எம் கொள்ளைச் சம்பவத்தை நடத்திக்கொண்டு, திருச்சூரில் இருந்து தப்பித்திருக்கிறார்கள். இந்தக் கும்பல் பல்வேறு மாநிலங்களிலும் இது போன்ற குற்றங்களில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது. தமிழ்நாடு காவல்துறை உடனடியாக சம்பந்தப்பட்ட மாநிலங்களை உஷார்படுத்தியது.

**அனைவருக்குள்ளும் ஒருங்கிணைப்புகளை முன்னெடுப்போம்!**

இந்தப் பாராட்டுக்குரிய பணியை இணைந்து நிறைவேற்றிய தமிழ்நாடு மற்றும் கேரள காவல் துறையினரை நான் இந்த நேரத்தில் வாழ்த்துகிறேன். இது போன்ற ஒருங்கிணைப்புகளை நாம் அனைவருக்குள்ளும் முன்னெடுப்பதுதான் இது போன்ற கூட்டங்களின் நோக்கம்!

அண்மையில், பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்படும் எரிசாராயத்தை வைத்து, சட்ட விரோதமாக போலி மதுபானம் தயாரிக்கும் ஆலையை தமிழ்நாடு காவல்துறையினர் கண்டுபிடித்தார்கள். இந்தச் சட்டவிரோத எரிசாராயக் கும்பல்கள் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது. இத்தகைய தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மாநிலத்துக்குள்ளே நுழைவதைத் தடுக்க, மாநில எல்லைகளில் கடுமையான சோதனைகளை மேற்கொள்ள வேண்டியது அவசரத் தேவையாக இருக்கிறது.

**புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்!**

ANPR (தானியங்கி வாகன எண் கண்டறியும்) கேமராக்கள், அதிநவீன ஸ்கேனர்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகளில் பயன்படுத்துவது மூலம், தடைசெய்யப்பட்ட பொருட்கள், ஏற்கெனவே, குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட வாகனங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் திறனை நாம் மேம்படுத்த இயலும்.

இணையவழிக் குற்றம் என்பது எந்தவித எல்லையும் இல்லாமல், சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, பெருகிவரக்கூடிய மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை. புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு இன்றைக்கு சிறப்பான வகையில் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலும், இணையவழிக் குற்றவாளிகளைப் பிடிக்க ஒரு மாநிலத்தின் காவல்துறை மற்றொரு மாநிலத்துக்குச் செல்லவேண்டிய நிலையில், அவர்கள் பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதிலும் நாம் இணைந்து செயல்படவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

2023ஆம் ஆண்டில் மட்டும், 1,390 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும், பலர் தமிழ்நாட்டுக்கு வெளியில் கைது செய்யப்பட்டிருப்பதும் நமக்குள்ளே ஒருங்கிணைந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. படித்து முடித்துவிட்டு, வெளிநாட்டில் வேலை தேடும் இளைஞர்களைக் குறிவைத்து, அவர்களை அடிமைகளாக, கணினிசார் குற்றங்களில் ஈடுபடுத்தும் Cyber Slavery பிரச்சினை தற்போது பெரிய அளவில் உருவெடுத்திருக்கிறது. சில தென்கிழக்கு நாடுகளை அடிப்படையாக வைத்துச் செயல்படும் குற்றவாளிகளின் பிடியில் சிக்கி, நம்முடைய இளைஞர்கள் பலர் மனரீதியாவும், உடல்ரீதியாவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதுபோன்று வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களைப் போக்குவதற்கு நமக்குள்ளே இருக்கின்ற ஒருங்கிணைப்பை பலப்படுத்தவேண்டும்.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தைக் கையாளுதல் உள்ளிட்ட உள்நாட்டுப் பாதுகாப்பின் முக்கியக்கூறுகள் குறித்து விவாதிக்க, இந்த மன்றம் வழிவகுக்கிறது. எந்தவித தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதமாக இருந்தாலும், அவற்றைக் கட்டுப்படுத்தி தடுக்க, முழு ஒத்துழைப்பையும், ஒருங்கிணைப்பையும் பலப்படுத்துமாறு இங்கே கூடியிருக்கின்ற மூத்த காவல்துறை அதிகாரிகளை நான் வலியுறுத்துகிறேன்.

**வலைதளங்களில் வதந்தி - முளையிலேயே கிள்ளி எறிந்தோம்!**

இன்றைக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு சமூகவலைதளங்களில் பரப்பப்படும் வதந்திகள் பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அவற்றின் மூலம் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களை நாம் பார்க்க முடிகிறது. ஏன், தமிழ்நாட்டிலேயே அப்படியொரு முயற்சியை மேற்கொண்டு பொது அமைதியைச் சீர்குலைக்க முயன்றதை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பல மாநிலங்களில் இருந்து வதந்தி பரப்பியவர்களை தேடிக் கண்டுபிடித்து, அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்தது என்பதை நீங்கள் அனைவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

உச்சநீதிமன்ற தலைமைநீதிபதி அவர்களே, "தமிழ்நாடு அமைதியான மாநிலம். அங்கே அமைதியின்மையை உருவாக்க ஏதாவது பரப்புவீர்களா? என்று யூடியூபர் ஒருவரது வழக்கில் சமூகவலைதளங்களின் பாதிப்பு பற்றி கடுமையாகச் சாடியதை இந்தநேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, சமூக வலைதளங்களில் வரும் வதந்திகள் பற்றியும் நாம் மிகுந்த கண்காணிப்புடன் இருந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு நம் மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும். அதற்கான ஆலோசனைகளையும் இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய - ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்!**

இந்த மாநாட்டை முன்னின்று நடத்தும் தமிழ்நாடு காவல்துறையானது, அனைத்துத் தளங்களிலும் சட்ட அமலாக்கத்திற்கு, குறிப்பாக போதைப் பொருட்கள், தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கிடையே செயல்படும் குற்றவாளிக் கும்பல்கள் மற்றும் கணினிசார் குற்றங்கள், சமூக வலைதள வதந்திகள் ஆகியவற்றின் மீதான தீவிர சட்ட நடவடிக்கைக்கு மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில், மற்ற மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அத்தகைய பலமான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் மூலம் எத்தகைய சட்டம் ஒழுங்கு, பொது அமைதி, உள்நாட்டுப் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் சமாளித்து, நம் குடிமக்கள் அனைவரின் பாதுகாப்பையும் உறுதிசெய்ய நாம் கடமையாற்றுவோம்! ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்!!

**குடிமக்களின் பாதுகாப்பு - நலன்களைக் காத்திடுவோம்!**

போதைப்பொருட்களாக இருந்தாலும், குற்றங்களாக இருந்தாலும், இணையவழிக் குற்றங்களாக இருந்தாலும், அதைத் தடுக்க நம்முடைய ஒருங்கிணைந்த முயற்சிதான் தேவைப்படுகிறது. இவ்வாறு நாம் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம், நம்முடைய குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் காப்பதோடு, அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தையும், நம் மாநிலங்களின் முன்னேற்றத்தையும் உறுதி செய்யலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு வாய்ப்பைத் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நான் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் சர்ச்சை சம்பவம்:

# இனியும் தமிழ்நாட்டு ஆளுநராக ஆர்.என்.ரவி நீடிக்கலாமா?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

**சென்னை, அக். 21 -**

**சென்னை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் நடைபெற்ற பொன்விழாவின் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடும்போது "திராவிடம்" என்ற சொல்லை நீக்கி பாடியது கண்டனத்துக்குரியதாகும். இனியும் தமிழ்நாட்டு ஆளுநராக ஆர்.என்.ரவி நீடிக்கலாமா? என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.**


தினகரன்
அக்டோபர் 19, 2024 சனிக்கிழமை
இஷ்டப்படி நடப்பதா?

அது வருமாறு:-

சென்னை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் பொன்விழா மற்றும் இந்தி மாத நிறைவு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ் மொழி பேசும் தமிழ்நாட்டில் இந்தி மாத விழா என்ற அறிவிக்கப்பட்டது பலத்த எதிர்ப்புக்குள்ளானது. அரசியல் கட்சியினர் இதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். தமிழ்நாடு முதல்வரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதமருக்கு கடிதமும் எழுதினார். இந்த நிலையில் நேற்று சென்னை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் இந்தி மாத நிறைவு விழா நடந்தது. விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு மக்களின் எண்ணங்களில் 50 ஆண்டுகளாக விஷம் ஏற்றப்பட்டுள்ளது என்றும், இந்த நிலத்தின் மிகவும் சக்தி வாய்ந்த மொழி சமஸ்கிருதம் என்று பேசினார். அதோடு அல்லாமல் இந்தியை ஊக்குவிக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தமிழ்த்தாய் வாழ்த்து பாடும்போது, "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்" என்ற வரி தவிர்க்கப்பட்டு பாடப்பட்டது.

இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புகளும் கண்டனங்களும் எழுந்துள்ளது. தமிழ்நாடு முதல்வர் தனது எக்ஸ் தளத்தில், "திராவிடம் என்ற சொல்லை நீக்கி, தமிழ்த்தாய் வாழ்த்தை பாடுவது தமிழ்நாட்டின் சட்டத்தை மீறுவதாகும். சட்டப்படி நடக்காமல், இஷ்டப்படி நடப்பவர் அந்தப் பதவி வகிக்கவே தகுதியற்றவர். இந்தியைக் கொண்டாடும் போர்வையில் நாட்டின் ஒருமைப் பாட்டையும் இந்த மண்ணில் வாழும் பல்வேறு இன மக்களையும் இழிவுபடுத்துகிறார் ஆளுநர். அவர் ஆளுநரா? ஆரியநரா?" என்று மிகவும் காட்டமாக பதிவிட்டு கண்டனம் தெரிவித்துள்ளார். திராவிட ஒவ்வாமையால் அவதிப்படும் ஆளுநர் தேசிய கீதத்தில் வரும் திராவிடத்தையும் விட்டுவிட்டு பாடச் சொல்வரா? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இதேபோல காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் ஆளுநருக்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளனர். திராவிடம் என்ற வாசகத்தை தவிர்த்தது மிகப்பெரிய பித்தலாட்டம் என்று அரசியல் கட்சியினர் விமர்சனம் செய்துள்ளனர். தமிழ்நாடு ஆளுநருக்கு இதுபோன்ற எதிர்ப்புகளும், கண்டனங்களும் ஒன்றும் புதிதல்ல. ஆளுநராக பதவியேற்றதில் இருந்தே அவர் இது போன்ற சர்ச்சைகளில் சிக்குவது வாடிக்கையாக உள்ளது. அதற்கு பல எதிர்ப்புகள் எழுந்தாலும் அவரது சர்ச்சை பேச்சுகளும், சர்ச்சை நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அமைச்சரவை முடிவுகளுக்கு ஒப்புதல் கொடுக்காமலும், முக்கிய மசோதாக்களில் கையெழுத்திடாமலும் மாதக்கணக்கில் கிடப்பில் போட்டுக்கொண்டு முடிவு எடுக்காமல் இருந்தது போன்ற நடவடிக்கைகளுக்கு கோர்ட் குட்டு வைத்தும் ஆளுநர் தனது நிலையை மாற்றிக்கொள்ளவில்லை.

தமிழ்மொழியை இழிவுபடுத்தி, இந்தியையும், சமஸ்கிருதத்தையும் உயர்த்தி பிடிப்பதை தமிழ்நாட்டு மக்கள் கொஞ்சம் கூட ரசிக்கவில்லை என்பதை அவர் உணரவில்லை.

அதற்கு உதாரணமாகத்தான் திராவிடம் என்ற வார்த்தை தவிர்ப்பு சம்பவம் நடந்துள்ளது. கவனச்சிதறல் காரணமாக பாடியவர் ஒரு வரியை தவறாக விட்டுவிட்டதாக தூர்தர்ஷன் விளக்கம் அளித்துள்ளது. இதில் ஆளுநருக்கு எந்த பங்கும் இல்லை என்று ஆளுநர் ஊடக ஆலோசகர் தெரிவித்துள்ளார். ஆனாலும் ஆளுநர் பங்கேற்ற நிகழ்ச்சியில் இவ்வாறு நடந்திருப்பது திராவிடத்துக்கு எதிராக இஷ்டபடி நடந்துகொள்ளலாம் என்ற நோக்கத்தில் நடந்ததாகவே கருதப்படுகிறது. எனவே, இனியும் தமிழ்நாட்டு ஆளுநராக ஆர்.என். ரவி நீடிக்கலாமா என்பது கேள்விக்குறியே.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

### தஞ்சாவூர் - பாப்பாநாடு சாலை விபத்தில் உயிரிழந்த

# காவல்துறை உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு இரங்கல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*தஞ்சாவூர், அக். 21-*

தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாடு சாலை விபத்தில் உயிரிழந்த காவல் துறை தனிப்பிரிவு குற்றப்புல னாய்வுத் துறை சிறப்பு உதவி ஆய்வாளரின் குடும்பத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புல னாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்த செந்தில்குமார் (வயது 49) என்பவர் நேற்று முன்தினம் (19.10.2024) பிற்பகல் 3.15 மணியளவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவிட்டு திரும்பும் வழியில் இருசக்கர வாகனத்தில் பட்டுக்கோட்டை சென்றபோது,

தஞ்சாவூர் பட்டுக்கோட்டை சாலையில் கறம்பியம் அருகில் எதிரில் வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும டைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

---

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் ஏ.அப்பாஸ்கான் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **துரைமுருகன்** |
| சென்னை - 18 | பொதுச் செயலாளர் |
| நாள்- 19.10.2024 | தி.மு.க. |

---

## அணைக்கட்டு தொகுதியில் பொதுமக்களுக்கு நில வேம்பு கசாயம் வழங்கல்!

*வேலூர், அக். 21 -*

வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி பொது மக்களுக்கு நிலவேம்பு கசாயம் 12 ஆட்டோக்கள் மூலமாக வழங்கும் நிகழ்ச்சி வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் மு.பாபு, கோ.குமாரபாண்டியன், சி.எல்.ஞானசேகரன், ந.கஜேந்திரன் மற்றும் பகுதி கழக செயலாளர்கள் சி.எம்.தங்கதுரை, ஆர்.கே.ஐயப்பன், பேரூர் கழக செயலாளர்கள் தி.மு.ஜாகீர் உசேன், பி.அருள்நாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் புதல்வர்

# மணிமன்றவாணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 20 -

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் புதல்வரும் தமிழரசு இதழில் பணியாற்றியவருமான மணிமன்றவாணன் மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு: -

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் புதல்வரும் "தமிழரசு" இதழில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான மணி மன்ற வாணன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

தமிழுக்குத் தொண்டு செய்த பெருமகனார் மொழிஞாயிறு தேவநேயப் பாவணரின் வழித்தோன்றலான மணிமன்றவாணன் மறைவால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

### பெரம்பலூர் மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ந.ஜெகதீஸ்வரன் அவர்கள் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 23 (புதன்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் பெரம்பலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **துரைமுருகன்** |
| சென்னை - 18 | பொதுச் செயலாளர் |
| நாள்- 19.10.2024 | தி.மு.க. |

---

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# திருத்தணி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருத்தணி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்த்தி ரவி சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **கே. இராஜேந்திரன்** (2/20ஏ, பொந்தால கண்டிகை கிராமம், வி.கே.ஆர்.புரம் அஞ்சல், திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் 631 205.) அவர்கள் திருத்தணி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **துரைமுருகன்** |
| சென்னை - 18 | பொதுச் செயலாளர் |
| நாள்- 19.10.2024 | தி.மு.க. |

---



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் சாரதா மஹாலில் கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற தாட்கோ மானியம் மற்றும் கூட்டுறவு கடன் வழங்கும் விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை தஞ்சாவூர் மாவட்ட மகளிர் அதிகார மையம் மூலம் பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்னும் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம்,கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி ஹிருத்யா எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி மற்றும் பலர் உடன் உள்ளனர்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைய்நல்லூர் மேற்கு ஒன்றியம் செம்மார் ஊராட்சியில் 60.000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்நிலை தேக்கத் தொட்டி செம்மார் முதல் ஏமப்பூர் வரை புதிய தார் சாலையை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன்,மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.